


கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.5.2026) நாடாளுமன்ற உறுப்பினர்.தயாநிதி மாறன் அவர்களின் மாமனார் எஸ்.ராமரத்தினம் அவர்கள் மறைவையொட்டி, சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார்.

## வாட்ஸ் அப்பில் வலம் வரும் செய்தி!




### நடுநிலை நாளேடு என்று சொல்லிக்கொள்ளும்

# தினமலர் “நாலாந்தர பத்திரிகை” போல் செய்தி வெளியிடுவதா?

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி கண்டனம்!

சென்னை, மே 3-

நடுநிலை நாளேடு என்று சொல்லிக்கொள்ளும் ‘தினமலர்’ நாளேடு ஒரு “நாலாந்தர பத்திரிகை” போல செய்தி வெளியிடுவதா என்று அந்த நாளேட்டிற்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ‘தினமலர்’ திருச்சி பதிப்பு ஆசிரியருக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:

பாரம்பரியமிக்க, நடுநிலை நாளிதழ் என்று தம்பட்டம் அடித்துக் கொள்ளும் ‘தினமலர்’ திருச்சி பதிப்பில் (1.5.2026) அன்று காலை, முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை நாமக்கல் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் நாமக்கல் இராணி அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்த புகைப்படத்துடன் “வணக்கம் சொன்ன பிரேமலதா, கண்டுகொள்ளாத ஸ்டாலின்” எனும் தலைப்பில் செய்தி வெளியிட்டிருக்கிறீர்கள்.

குறிப்பாக, அந்த புகைப்படத்தின் பக்கத்தில் “தி.மு.க. வெளியிட்ட புகைப்படம்” என்று குறிப்பிட்டு வெளியிட்டிருக்கிறீர்கள். இது ஒரு பாரம்பரியமிக்க - நடுநிலை என்று பீற்றிக் கொள்ளும் நாளிதழ் வெளியிடும் செய்தியா?

30.4.2026 அன்று காலை, தி.மு.க. தலைமைக் கழகத்தின் அதிகாரப்பூர்வ மின்னஞ்சலான headquarters@dmk.in என்ற மின்னஞ்சலில்

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை (30.04.2026) அன்று, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கழக வேட்பாளர்கள், பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம், எ.வ. வேலு, கே.ஆர். பெரியகருப்பன், சு. முத்துசாமி, சிவ.வீ. மெய்யநாதன், சி.வி.கணேசன், முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி, கழக துணை அமைப்புச் செயலாளர் எஸ். ஆஸ்டின், டி.ஜெ. கோவிந்தராஜன், சபா. இராஜேந்திரன், நாமக்கல் இராணி, காதர்பாட்சா முத்துராமலிங்கம், கே.எஸ். மூர்த்தி, ரெ. மகேஷ், ஆ.தமிழரசி, எஸ்.ஏ. சத்யா, மு.மணிகண்டன்,



புதுச்சேரி ஆர். சிவா ஆகியோர் நேரில் சந்தித்தனர்.” என தெளிவாக தலைமைக் கழக பத்திரிகைச் செய்தியில் குறிப்பிட்டு, 19 கழக வேட்பாளர்கள் தி.மு.க. தலைவர் அவர்களை சந்தித்த படம் வெளியிட்டது.



• தினமலர் • திருச்சி • 1.5.2026

திமுக வெளியிட்ட புகைப்படம்

**வணக்கம் சொன்ன பிரேமலதா கண்டுகொள்ளாத ஸ்டாலின்**

**பாராமுகத்துக்கு காரணம் என்ன?**

சட்டசபை தேர்தலுக்குப் பின், முதல்வர் ஸ்டாலின் ஓய்வெடுக்க குடும்பத்துடன் கொடைக்கானல் சென்றார். 4 நாட்கள் ஓய்வுக்குப்பின், கடந்த 29ம் தேதி மாலை சென்னை திரும்பினார். நேற்று காலை திமுக தலைமை அலுவலகமான அறிவாலயத்துக்கு வந்தார். அங்கு அவரை திமுக நிர்வாகிகளும், வேட்பாளர்களும் நேரில் சந்தித்தனர்.

"சேலம் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட பிரேமலதா, ஸ்டாலினை மேடையில் வைத்துக்கொண்டே, 'தமிழகத்தில் எங்கும் பாலியல் வன்கொடுமை, போதை கலாச்சாரம். இதை தவிர அண்ணன் ஸ்டாலின் மீது வேறு என்ன குற்றச்சாட்டு வைக்க முடியும்' என்று பேசினார். அவரது பேச்சு சமூகவலைதளங்களில் வைரலானது. நெட்டிசன்கள் டிரோல்

எந்தெந்த கழக வேட்பாளர்கள் கழகத் தலைவர் அவர்களை சந்தித்தனர், எதற்காக சந்தித்தனர் தெளிவாக, படத்துடன் வெளியிட்டிருக்கும்போது, தங்கள் பத்திரிகை, “பத்திரிகா தர்மத்தை” கடைப்பிடிக்காமல், தங்கள் “எஜமான விசுவாசத்தை” காட்டும் வகையில், தி.மு.க. தலைமைக் கழகம் வெளியிட்ட செய்தியை திரித்தும், படத்தில் உள்ள **கழக வேட்பாளர் நாமக்கல் ராணியை “தே.மு.தி.க. பொதுச்செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த்”** என்று திரித்து வெளியிட்டதோடு, அத்துடன், நடக்காத ஒரு நிகழ்வை... தங்கள் கற்பனையில் உதித்தவற்றை “திரைக்கதை”யாக எழுதி பொய்ச் செய்தியை பொதுவெளியில், தங்கள் பத்திரிகையில் பெரிய செய்தியாக வெளியிட்டிருக்கிறீர்கள்.

### சிண்டு முடிக்கும் வேலை!

தே.மு.தி.க. கட்சி தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இணைந்தவுடன் இதுபோன்ற “சிண்டுமுடிக்கும்” வேலையை செய்து பார்த்தீர்கள். அதன்பின்னர், சேலம் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் திருமதி பிரேமலதா பேசியதை திரித்து வெளியிட்டு, தங்கள் “எஜமான் விசுவாசத்தை’ காட்டினீர்கள். அது மக்கள் மத்தியில் எடுபடவில்லை என்ற உடன், பொய்ச் செய்தியை, பொய்ப் படத்துடன் உங்கள் “எஜமான் விசுவாசத்தை” இப்படித்தான் காட்டுவீர்களா?

இது எப்படி இருக்கிறது என்றால், சமூக வலைதளமான “முகநூல்” பக்கத்தில் மார்பிங் போட்டோக்களை பதிவிட்டு, பொய்ச் செய்தியை பரவ விடுவதைப் போல, ஒரு பாரம்பரியமிக்க நடுநிலை என்று சொல்லிக் கொள்ளும் “நாலாந்தர பத்திரிகை” போல செய்தி வெளியிட்டிருப்பதை வன்மையாக கண்டிப்பதோடு,

உடனே, இச்செய்திக்கான மறுப்பு செய்தியை மக்கள் பார்க்கும் இடத்தில் “காலம்” செய்தியாக “Bold Letters”ல் நாளை காலை மறுப்பு செய்தி வெளியிட்டு, வருத்தத்தை பதிவிட வேண்டும்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர், ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தமது கடிதத்தில் கூறியுள்ளார்.

# திருச்சி தெற்கு மாவட்டத்தில் வாக்கு எண்ணும் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

திருச்சி, மே 3-

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள திருவெறும்பூர் திருச்சி கிழக்கு மணப்பாறை ஆகிய மூன்று சட்டமன்ற தொகுதிகளில் வாக்கு எண்ணும் முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று (03.05.2026 - ஞாயிற்றுக்கிழமை) கீழ்க்கண்ட விவரப்படி நடைபெற உள்ளது.

திருச்சி தெற்கு மாவட்ட வாக்கு எண்ணும் முகவர்கள் கூட்டம்,

காலை 7.00 மணிக்கு திருவெறும்பூர் தொகுதி காட்டூர் தேர்தல் அலுவலகம்,

காலை 9.00 திருச்சி கிழக்கு தொகுதி மாவட்ட அலுவலகம்,

காலை 11.00 மணிக்கு மணப்பாறை தொகுதி



மதுரை ரோடு தேர்தல் அலுவலகம்,

இக்கூட்டத்தில் மாநில,மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், வாக்கு எண்ணும் முகவர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### சம்பள மிருகமாய் இருந்தவனை

# மனிதன் என்று மதிப்புக்கூட்டிய தினம் மே தினம்!

## கவிப்பேரரசு வைரமுத்து வாழ்த்துச் செய்தி!

உழைப்பாளி இல்லையென்றால்
இந்த பூமி
பிறந்த மேனியாகவே
இருந்திருக்கும்;
நாகரிகத்துக்கு
உருவம் கிடைத்திருக்காது

மனிதன்
இரண்டு கால் மிருகமாய்
இருந்திருப்பான்

உலகம் காணுகிற
ஒவ்வொரு சுகமும்
தொழிலாளியின்
பத்துவிரல்களால்
படைக்கப்பட்டவை

உலகத்தின்
வற்றாத ஜீவ நதி
வேர்வை மட்டும்தான்

அவன் முதுகு வளைய வளைய
உலகு நிமிர்ந்தது

சம்பள மிருகமாய் இருந்தவனை
மனிதன் என்று
மதிப்புக்கூட்டிய தினம்
மே தினம்


சோறு போட்டவனுக்குச் சோறு
ஆடை நெய்தவனுக்கு ஆடை
வீடு கட்டியவனுக்கு வீடு



என்று
சிந்தித்துப் பார்த்த
சிறந்த தினம் மே தினம்

உலகத்தை
எந்த மதத்தாலும்
ஒன்றுபடுத்த முடியவில்லை;
உழைப்பு என்ற மதமே
ஒன்றுபடுத்தும்

வாழ்க மே தினம்
வெல்க தொழிலாளர்



கவிப்பேரரசு வைரமுத்து